மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரும்பைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தின் கொள்கை. மாநில அரசாங்கம் அதை ஏற்று நடத்தவேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அப்படி சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு பல காரணங்களாலே காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தினுல், ஒரு தனியாரை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டு, பிறகு அதை தேசியமயம் ஆக்கிவிடலாம் அல்லவா? ஆகவே, அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அம்மையார் அவர்கள் தனியாருக்காக வாதாடுவதைப் பார்த்து, பின்னுலே இருக்கிற அவர் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் தலையில் அடித்துக்கொள் கிருர்கள். நேற்றுதான் தனியார் ஏற்று நடத்தக்கூடாது என்பதற்காக வாதிட்டார்கள். அந்தக் கருத்து ஏற்றுக்கொள் வதற்கில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தனியாருக்காக யாரும் வாதாடவில்லை. 25-வது அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு ஒரே நாளில் எதையும் தேசிய மயம் ஆக்கிவிடலாமே, ஏன் இதைச் செய்யக்கூடாது என்றுதான் கேட்டேன். ஆகவே, இதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியாரிடம் கொடுத்து விட்டதற்குப் பிறகு தேசியமயம் ஆக்கலாம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியமயமாக்கப்போ கிறோம் பிறகு என்று அறிவித்து விட்டு, நீங்கள் யாராவது வருகிறீர்களா என்று கேட்டால், எந்த தனியாரும் வரமாட்டார்கள்.

* 204 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Geological survey of Hosur and Denkanikota taluks in Dharmapuri has been completed; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம். 1953-56, 1958-63 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் இந்திய புவியியல் ஆய்வுத் துறையினர் ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்களில் முறையான கனிப்பொருள் ஆய்வு நடத்தினர். இந்திய புவியியல் ஆய்வுத்துறையினர் நடத்திய ஆய்வில் மேற்குறிப்பிட்ட வட்டங் களில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கனிப்பொருள் எதுவும் காணப்படவில்லை. டோலிரைட், பார்பிரிட்டிக் சைனைட் என்ற இருவகைக் கற்களும் நல்ல மெருகெடுத்துக் கொள்ளும் தன்மையுடையதால், அழகுபடுத்தும் கற்களாக உபயோகப்படுத்துவதற்காக சில இடங்களில் வெட்டியெடுக்கப் படுகின்றன.

1971 டிசம்பர் 9]

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries whether that survey report has been sent to the Government? May I also request the Hon. Minister to give us a copy of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதி அனுப்பினால் அந்த அறிக்கை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யலாம்.

நகராட்சிப் பகுதிகளில் ஊர்தி நீதிமன்றங்கள்

*205 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில், நடமாடும் நீதிமன்றங்களை இயக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமி திரு. செ. மாதவன் : கோயம்புத்தூரில் சிறப்பு போக்குவரத்து நடமாடும் நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. ஏனைய நகராட்சிகளை பொறுத்தவரையில் அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தற்போது நடமாடும் நீதிமன்றங்கள் தமிழகத்தில் எங்கெங்கே இருக்கிறது என்பதனையும் எங்கெங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதனையும், இந்த நடமாடும் நீதிமன்றங்கள் எத்தகைய அடிப்படையின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்கெங்கே அதிகமான வழக்குகள் வருகின்றனவோ அந்தத் தன்மைகளை ஆராய்ந்து, உயர்நீதி மன்றத்தின் சிபார்சின் பேரில் அமைக்கப்படுகிறது. இப்போது சென்னையில் இருக்கிறது. மதுரை நகரத்தில் ஒன்று வைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதிமன்றங்களுக்கு ஸ்டாஃபிங் பேட்டர்ன் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கு ஹானரரி நீதிபதிகளைப் போடுகிறோம். அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட கிழமைகளில் சென்று குறிப்பிட்ட வழக்குகளை விசாரிக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே. உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவு மதுரையில் அமைப்பதாக இருந்ததே, அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர் நீதிமன்றம் நடமாடும் நீதிமன்றம் அல்ல. இது நடமாடும் நீதிமன்றத்தைப் பற்றிய கேள்வி.